STC.No.11/2026 PW1.திரு.மோகன்தாஸ்
தேதி– 18.08.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று கம்பம், கனரா வங்கியில் கன்மேனாக வேலை பார்க்கிறேன். எனக்கும், எதிரிக்கும் எத்தனை வருடமாக பழக்க வழக்கம் என்று கூறுகிறேன் என்றால் ஐந்து வருடம் பழக்கம் இருக்கும். 10.08.2025 ம் தேதியன்று எதிரியுடன் யார் யார் வந்ததாக கூறுகிறேன் என்றால் எதிரி மட்டும் தான் வந்தார். யார் முன்னிலையில் வைத்து நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் எனது மனைவி உமா முன்னிலையில் பணம் கொடுத்தேன். எதிரியின் கணவர், அம்மா, மாமியார் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 29.10.2024 ல் எதிரி எனது கணக்கிற்கு 95,000/– அனுப்பியுள்ளார் என்றால் இல்லை. நான் ஏல சீட்டு நடத்துகிறேனா என்றால் இல்லை. எனது மகள் பெயர் அமிர்ததர்ஷினி ஆகும். எதிரி என்னிடம் ரூ.2 லட்சம் ஏல சீட்டு போட்டு மாதம் ரூ.6000 என 20 மாதங்கள் கட்டினார் என்றால் நான் ஏல சீட்டு நடத்தவில்லை.எதிரி கொடுக்க வேண்டிய மீதி தொகையான ரூ.108000/– த்திற்கு ஆதரவாக எனது மனைவியிடம் காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல.

2. எதிரி காசோலையில் கையொப்பம் மட்டும் தான் செய்து கொடுத்தார் என்றும், வரவு செலவு அனைத்தும் எனக்கு தெரியாது என்றும், எனது மனைவிக்கு தான் தெரியும் என்றால் சரியல்ல, காசோலையில் தேதி, பெயர், தொகை அனைத்தும் எதிரி பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்த பின்பு தான் பணம் கொடுத்தேன். காசோலையில் எதிரியின் கையொப்பத்திற்கும், மற்ற எழுத்துக்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல, ஒரே பேனாவால் எழுதப்பட்டதாகும். நானே காசோலையை பூர்த்தி செய்ததாக கூறினால் அது தவறு என்றால் சரிதான். எதிரிக்கும், எனது மனைவிக்கும் தான் வரவு செலவு என்றால் சரியல்ல. எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பியூட்டி பார்லர் உரிமத்தை பெற்றேனா என்றால் இல்லை. காசோலை தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் கையில்

**கொடுத்தேன். காசோலையை நானே பூர்த்தி செய்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.18 23:08:42 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam